**பெருநகர சென்னை மாநகராட்சி**

**செய்தி வெளியீடு**

**செ.வெ.எண். 450** **நாள்: 19.12.2025**

**சென்னை மாவட்டத்திற்குட்பட்ட 16 சட்டமன்றத் தொகுதிகளுக்கான வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிரத் திருத்தப் பணி மேற்கொள்ளப்பட்டு, இதற்கான வரைவு வாக்காளர் பட்டியலினை மாவட்ட தேர்தல் அலுவலர்/ஆணையாளர் திரு.ஜெ.குமரகுருபரன், இ.ஆ.ப., அவர்கள் இன்று (19.12.2025) வெளியிட்டார்.**

சென்னை மாவட்டத்திற்குட்பட்ட 16 சட்டமன்றத் தொகுதிகளுக்கான வாக்காளர் பட்டியல், 01.01.2026 ஆம் தேதியை தகுதி நாளாக கொண்டு சிறப்பு தீவிரத் திருத்தம் மேற்கொள்ளப்பட்டு, இதற்கான வரைவு வாக்காளர் பட்டியலினை மாவட்ட தேர்தல் அலுவலர்/ஆணையாளர் திரு.ஜெ.குமரகுருபரன், இ.ஆ.ப., அவர்கள், அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளின் பிரநிதிகள் முன்னிலையில் இன்று (19.12.2025) ரிப்பன் கட்டட அலுவலகத்தில் வெளியிட்டார்.

**பின்னர் செய்தியாளர் சந்திப்பில் மாவட்ட தேர்தல் அலுவலர்/ஆணையாளர் திரு.ஜெ.குமரகுருபரன், இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்ததாவது:**

இந்திய தேர்தல் ஆணையத்தின் அறிவுறுத்தல்களின்படி, வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிரத் திருத்தப் பணியி , கணக்கெடுப்பு பணி நிறைவுற்று வரைவு வாக்காளர் பட்டியல் இன்று (19.12.2025) வெளியிடப்பட்டுள்ளது.

இந்த வரைவு வாக்காளர் பட்டியல் சென்னை மாவட்டத்தில் 16 சட்டமன்றத் தொகுதிகளின் வாக்காளர் பதிவு அலுவலர்களின் அலுவலகங்களிலும் (பெருநகர சென்னை மாநகராட்சியின் 4, 5, 6, 8, 9, 10, 13 ஆகிய மண்டல அலுவலகங்களில் உள்ள வாக்காளர் பதிவு அலுவலர்களின் அலுவலகங்களில்), மற்றும் அனைத்து வாக்குச்சாவடி மையங்களிலும் சிறப்பு முகாம்களிலும் பொதுமக்கள் பார்வைக்காக வைக்கப்படும். பொதுமக்கள் தங்களது பெயர் மற்றும் தங்கள் குடும்பத்தில் உள்ள வாக்காளர்களின் பெயர்கள் குறித்த விவரங்களை சரிபார்த்துக் கொள்ள கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

வாக்காளர் பட்டியலில் இடம் பெறாதவர்கள் / தகுதியுள்ள வாக்காளர்கள் மற்றும் 01.01.2026 அன்று 18 வயது பூர்த்தி அடைந்த இளம் வாக்காளர்கள் படிவம் 6-ஐ பூர்த்தி செய்து தங்களது பெயர்களை சேர்க்கலாம். வாக்காளர் பட்டியலில் நிரந்தர இடமாற்ற பதிவுகள், இறந்தோர் மற்றும் ஆட்சேபனை தொடர்பான பெயர் நீக்கம் தொடர்பாக படிவம் 7-ஐ பூர்த்தி செய்து , சட்டமன்றத் தொகுதிகளிலேயே ஒரு இடத்திலிருந்து மற்றொரு

இடத்திற்கு குடிபெயர்ந்து புதிய வசிப்பிடத்தில் உள்ளவர்களும், வேறு தொகுதிக்கு குடிபெயர்ந்தவர்களும் தங்கள் பெயரை அந்த பகுதியிலும்/ தொகுதியிலும் சேர்க்கவோ (அ) மாற்றவோ விருப்பப்பட்டால் படிவம் 8-ஐ பூர்த்தி செய்தும், அதற்கான ஆவண ஆதார நகல்களை இணைத்து சம்பந்தப்பட்ட சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட பெருநகர சென்னை மாநகராட்சி மண்டல அலுவலகத்தில் உள்ள வாக்காளர் பதிவு அலுவலரிடம் சமர்ப்பிக்கலாம்.

மேலும் இதற்காக வாக்குச்சாவடி மையங்களில் சிறப்பு முகாம்கள் நடைபெறும் போது அதனை வாக்குச்சாவடி நிலை அலுவலர்களிடமும் சமர்ப்பிக்கலாம். மேலும் https://voters.eci.gov.in என்ற இணையதளம் மூலமாகவும், தங்களுடைய பெயர் சேர்த்தல், நீக்கம் மற்றும் திருத்தங்கள் மேற்கொள்ளலாம்.

சென்னை மாவட்டத்தில் 3,718 வாக்குச்சாவடிகள் இருந்த நிலையில் தற்போது புதிதாக 361 வாக்குச்சாவடிகள் உருவாக்கப்பட்டு, மொத்தம் 4,079 வாக்குச்சாவடிகள் அமைக்கப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில் இன்று வரைவு வாக்காளர் பட்டியல் வெளியிடப்படுகிறது. அதிகபட்சமாக வேளச்சேரி சட்டமன்றத் தொகுதியில் 314 வாக்குச்சாவடிகளும், குறைந்தபட்சமாக துறைமுகம் சட்டமன்றத் தொகுதியில் 192 வாக்குச்சாவடிகளும் அமைக்கப்பட்டுள்ளன.

சென்னை மாவட்டத்தில் 27.10.2025 அன்றைய தேதியில் 19,62,245 ஆண் வாக்காளர்களும், 20,41,144 பெண் வாக்காளர்களும் மற்றும் 1,305 இதர வாக்காளர்களும் என மொத்தம் 40,04,694 வாக்காளர்களின் பெயர்கள் இடம்பெற்றிருந்தன.

தற்போது நடைபெற்று முடிந்த வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிரத் திருத்தம் 2026ன்படி, சென்னை மாவட்டத்தில் 12,47,690 ஆண் வாக்காளர்களும், 13,31,243 பெண் வாக்காளர்களும் மற்றும் 743 இதர வாக்காளர்களும் என மொத்தம் 25,79,676 வாக்காளர்களின் பெயர்கள் வரைவு வாக்காளர் பட்டியலில் இடம் பெற்றுள்ளது. மேலும் 1,56,555 இறந்த வாக்காளர்கள், 12,22,164 இடம்பெயர்ந்தோர், 27,328 Absent, 199 இதர இன வாக்காளர்கள் மற்றும் 18,772 இரட்டை பதிவு வாக்காளர்கள் என மொத்தம் 14,25,018 வாக்காளர்களின் பெயர் நீக்கம் செய்யப்பட்டுள்ளது.

தற்போது வெளியிடப்படும் வரைவு வாக்காளர் பட்டியலின்படி சென்னை மாவட்டத்தில் வாக்காளர்களின் எண்ணிக்கை சட்டமன்றத் தொகுதி வாரியாக கீழ்க்கண்டவாறு உள்ளது.

| வ. எண் | சட்டமன்றத் தொகுதி | ஆண் ணவாக்காளர்கள் | பெண் வாக்காளர்கள் | மூன்றாம் பாலினம் | மொத்த வாக்காளர்கள் |
|---|---|---|---|---|---|
| 1. | எண்.11 டாக்டர்.இராதாகிருஷ்ணன் நகர் | 85239 | 93050 | 67 | 178356 |
| 2. | எண்.12பெரம்பூர் | 97357 | 102758 | 66 | 200181 |
| 3. | எண்.13.கொளத்தூர் | 90098 | 96709 | 34 | 186841 |
| 4. | எண்.14.வில்லிவாக்கம் | 69071 | 73603 | 32 | 142706 |
| 5. | எண்.15. திரு.வி.க. நகர் (தனி) | 79094 | 85385 | 49 | 164528 |
| 6. | எண்.16.எழும்பூர் (தனி) | 59866 | 62699 | 42 | 122607 |
| 7. | எண்.17.ராயபுரம் | 71114 | 75698 | 53 | 146865 |
| 8. | எண்.18.துறைமுகம் | 55182 | 55280 | 55 | 110517 |
| 9. | எண்.19.சேப்பாக்கம் – திருவல்லிக்கேணி | 73260 | 77543 | 43 | 150846 |
| 10. | எண்.20.ஆயிரம் விளக்கு | 67566 | 73768 | 59 | 141393 |
| 11. | எண்.21.அண்ணா நகர் | 78287 | 83802 | 46 | 162135 |
| 12. | எண்.22.விருகம்பாக்கம் | 84945 | 90130 | 48 | 175123 |
| 13. | எண்.23.சைதாப்பேட்டை | 90335 | 96098 | 56 | 186489 |
| 14. | எண்.24.தியாகராயநகர் | 67420 | 72050 | 28 | 139498 |
| 15. | எண்.25.மயிலாப்பூர் | 86901 | 94669 | 22 | 181592 |
| 16. | எண்.26.வேளச்சேரி | 91955 | 98001 | 43 | 189999 |
| **மொத்தம்** | | **12,47,690** | **13,31,243** | **743** | **25,79,676** |

மேலும் குறைந்தபட்சமாக எண்.18. துறைமுகம் சட்டமன்றத் தொகுதியில் 1,10,517 வாக்காளர்களும், அதிகபட்சமாக எண்.12 பெரம்பூர் சட்டமன்றத் தொகுதியில் 2,00,181 வாக்காளர்களும் உள்ளனர்.

**வரைவு வாக்காளர் பட்டியல்**

- வரைவு வாக்காளர் பட்டியலின்படி, 2002/2005ஆம் ஆண்டு முந்தைய சிறப்பு தீவிரத் திருத்தத்தில் புதிய விவரங்கள் இல்லாதவர்கள் (No Mapping) என 2,37,619 வாக்காளர்கள் கண்டறியப்பட்டுள்ளனர்.
- கண்டறியப்பட்ட வாக்காளர்களுக்கு அறிவிப்பு வழங்கி, உதவி வாக்காளர் பதிவு அலுவலர் நிலையில் விசாரணை செய்து, இந்திய தேர்தல் ஆணையம் நிர்ணயித்துள்ள 13 ஆவணங்களில் ஏதேனும் ஒரு ஆவணத்தினை பெற்று தகுதியின் அடிப்படையில் இறுதி உத்தரவு பிறப்பிக்கப்படும்.
- மேற்காணும் உத்தரவின் பேரில், மாவட்ட தேர்தல் அலுவலர்/ஆணையாளர் அவர்களிடம் முதல் மேல்முறையீடு செய்து கொள்ளலாம். இரண்டாம் மேல்முறையீடாக தலைமைத் தேர்தல் அலுவலர், சென்னை அவர்களுக்கு சீராய்வு மனுத்தாக்கல் செய்திடலாம்.

**புதிய விண்ணப்பங்கள் பெறுதல்**

- இந்திய தேர்தல் ஆணையத்தின் அறிவுறுத்தலின்படி 19.12.2025 முதல் 18.01.2026 வரை, 01.01.2026 மைய நாளாக கொண்டு 18 வயது பூர்த்தியடைந்தவர்கள் பெயர் சேர்த்தல், தற்போதுள்ள வாக்காளர் பட்டியலில் பெயர் நீக்கல் மற்றும் திருத்தம் செய்தல் தொடர்பான படிவங்கள் பெறப்படும்.
- புதிய வாக்காளர்களை பட்டியலில் சேர்க்கும் பொருட்டு, 20.12.2025 மற்றும் 21.12.2025 ஆகிய இரு தினங்கள் அந்தந்த வாக்குச்சாவடி மையங்களில் காலை 10 மணி முதல் மாலை 6 மணி வரை நடைபெறும் சிறப்பு முகாம்களை அனைவரும் பயன்படுத்திக் கொண்டு பயன்பெறுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.
- அனைத்து அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளுக்கும், வாராந்திர அறிக்கையாக புதிய விண்ணப்பங்கள் பெறப்பட்ட விவரங்கள் வழங்கப்படும்.
- அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகள் மூலம் தினசரி 10 படிவங்கள் பெற்றுக் கொள்ளப்படும்.
- வாக்குச்சாவடி நிலை அலுவலர்களுக்கான மேற்பார்வையாளர்கள் 10% படிவங்கள் ஒவ்வொரு வாக்குச்சாவடி மையத்திற்கு விசாரணை செய்திடுவார்.
- உதவி வாக்காளர் பதிவு அலுவலர், வாக்கு சாவடி நிலை அலுவலர் நிராகரிப்பு செய்த அனைத்து படிவங்களையும் விசாரணை செய்து, இறுதி ஆணை பிறப்பிப்பார்.

- ❖ அனைத்து அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளைச் சார்ந்த பிரமுகர்களும், படிவங்கள் மீதான விசாரணை மற்றும் இதர தொடர்புடைய அனைத்து பணிகளுக்கும் தங்களது முழுமையான ஒத்துழைப்பு நல்கிட கேட்டுக் கொள்ளப்படுகிறது.

**இந்திய தேர்தல் ஆணையத்தின் அறிவுரைகளின்படி, பெயர் சேர்த்தல், நீக்கல் மற்றும் விசாரணை செய்தல் ஆகியவற்றிற்கு கால அட்டவணை பின்வருமாறு:**

| வ எண் | பணிகள் | கால அட்டவணை |
|---|---|---|
| 1 | வரைவு வாக்காளர் பட்டியல் வெளியீடு | 19.12.2025 |
| 2 | புதியதாக சேர்த்தல், நீக்கல், திருத்தம் படிவங்கள் பெறுதல் | 19.12.2025 – 18.01.2026 |
| 3 | அறிவிப்பு அனுப்புதல்<br>கணக்கெடுப்பு படிவங்கள் மீதான விசாரணை மற்றும் புதிய விண்ணப்பங்கள் மீதான விசாரணைகள் | 19.12.2025 – 10.02.2026 |
| 4 | இறுதி பட்டியல் வெளியீடு | 17.02.2026 |

இந்நிகழ்வில், கூடுதல் மாவட்ட தேர்தல் அலுவலர்கள் திருமதி க. கற்பகம், இ.ஆ.ப., (இணை ஆணையாளர் (கல்வி), திரு.ம.பிரதிவிராஜ், இ.ஆ.ப., (வருவாய் (ம) நிதி), வட்டார துணை ஆணையாளர்கள் திரு.கட்டா ரவி தேஜா, இ.ஆ.ப., (வடக்கு) திரு.எச்.ஆர்.கௌஷிக், இ.ஆ.ப., (மத்தியம்), திரு.அஃதாப் ரசூல், இ.ஆ.ப., (தெற்கு), மாவட்ட வருவாய் அலுவலர் (தேர்தல்) திருமதி நா. பூஷ்ணாதேவி, அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிப் பிரநிதிகள், அனைத்து வாக்காளர் பதிவு அலுவலர்கள் மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**செய்தி வெளியீடு : இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்,**

**பெருநகர சென்னை மாநகராட்சி**